9th February 1959]

Sri A. VEDARATHNAM : இந்தப் பாலத்திற்கு முதலில் எஸ்டிமேட் தயார்செய்தபோது அந்த மண் சோதனை செய்யப்படவில்லையா? மண் சோதனை என்று சொல்லி இப்போது இடையில் வேலையை நிறுத்தி வைப்பதற்கு என்ன காரணம் ? எப்போது இந்தப் பாலத்தின் வேலை மறுபடியும் துவங்கி பூர்த்தியாகும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முதலில் மேலே இருக்கக்கூடிய மண்ணை சோதனை செய்து அதன்பேரில் பால வேலை துவக்கப்பட்டது. ஆனால் கீழே அந்த மண்ணின் ரகம் மாறிவிட்டதன் காரணமாக அதை மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அந்த பரிட்சை முடிந்தவுடன் வேலை துவக்கப்படும்.

Strike notice by Teachers

***156 Q.—Sri V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) வடாற்காடு ஜில்லா, திருப்பத்தூர் இராமகிருஷ்ண உயர் நிலைப் பள்ளியின் ஆசிரியர்களிடமிருந்து 1958-ம் வருடம் அக்டோபர் மாதம் 27-ந் தேதி வேலை நிறுத்த நோட்டீஸ் வந்ததா ?

(ஆ) அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A notice of strike, dated 27th October 1958 was given by the teachers of the Ramakrishna High School, Tiruppattur that if their salaries due were not paid before 30th November 1958 they would go on strike from 1st December 1958. Instructions were issued by the Director of Public Instruction while releasing the grant for 1957–58 to the management of the institution, that the amount should be first utilized to discharge the liability to teachers. There has been no further complaint from the teachers.

Sri V. K. KOTHANDARAMAN : இது போன்று ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து எத்தனை முறை வேலை நிறுத்த நோட்டீஸ் வந்திருக்கிறது ? இப்பிரச்சனை இது போல் எத்தனை முறை தீர்க்கப்பட்டிருக்கிறது ? ஒவ்வொரு முறையும் ஐந்து மாதம், 6 மாதம் என்று ஆசிரியர்களுக்கு வழக்கம்போல சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தால் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் ? இதனால் கல்வித் தரம் வெகுவாக பாதிக்கப்படாதா ? ஆகையால் இதை மீண்டும் பரிசீலனை செய்து இந்தப் பாடசாலையை சர்க்காரே எடுத்து நடத்த முயற்சி செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு முன்னால் ஒரு தடவை இதைப்பற்றி புகார் வந்தது என்று ஞாபகம். இப்போது நிர்வாகத்திலேயே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்கிற விஷயம் கனம் அங்கத்தினருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

Cancer Institute, Adyar

***157 Q.—Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is nay proposal to develope the Cancer Institute, Adyar, into a modern Radium Therapy Centre?

[9th February 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : The Cancer Institute, Adyar, Madras, is not a mere radium therapy centre but is an integrated Cancer Centre with provision for super-voltage cobalt beam therapy, and radio active isotope therapy, etc. The Institution has schemes for expansion.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் இந்த செண்டரிலே எவ்வளவு பேர் சிகிச்சை பெறுகிறுர்கள் ? மேலும் சிகிச்சை பெறுவதற்கு எத்தனை பேர் வெயிட்டிங் லிஸ்டில் உள்ளார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இருக்கிற பெட் ஸ்ட்ரெங்த் எனக்குத் தெரிந்த வரையில் சொல்கிறேன். 120. வெயிட்டிங் லிஸ்டில்லைப் பற்றித் தெரியாது.

SRI A. A. RASHEED : Do the Government pay any subsidy or grant to his Institute and if so how much ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான்-ரெக்கரிங் இரண்டு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மெய்ண்ட்டினென்ஸ் கிராண்டு 1957–58-ல், 46 ஆயிரம், 1958–59-ல் அட்வான்ஸ்ஸாகக் கொடுத்தது 31 ஆயிரம். இனி 57 ஆயிரம் கொடுக்கலாம் என்று உத்தேசம்.

9-50 a.m. SRI K. B. S. MANI : புற்று நோய்க்கு சிகிச்சை செய்வது மட்டும் இந்த ஆஸ்பத்திரியில் நடக்கிறதா அல்லது இந்த நோய் எவ்வாறெல்லாம் உண்டாகிறது என்ற ஆராய்ச்சியும் அங்கே நடக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆராய்ச்சிகள் நடத்துவதற்காகவும் மத்திய சர்க்காரிடம் உதவி கோரியிருக்கிறோம். இப்போதும் அங்கே ஒரு சிறிய அளவில் ஆராய்ச்சி நடக்கிறது.

MR. SPEAKER : 158-வது கேள்வியை இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் சம்பந்தப்பட்ட மந்திரி அவர்கள் இன்று சபைக்கு வரவில்லை.

National Extension Block in Tiruchirappalli district

* 159 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the names of the National Extension Block areas in Tiruchirappalli district;

(*b*) the names of the Blocks where the National Extension Service has been extended; and

(*c*) the number of Block areas situated in under-developed and backward pockets in the district?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement[a] is placed on the table of the House.

SRI K. R. VISWANATHAN : திருச்சி மாவட்டத்தில் 39 ப்ளாக் எல்லைகளில் 16 ப்ளாக் எல்லைகளுக்குத் தான் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் பொருளாதாரத்தில் பிற்பட்ட, முன்னேறாத பிரதேசங்களில், 3 எல்லைகளுக்குத் தான் இத் திட்டம்

[a] Printed as Appendix II on page 420 infra.